## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீயினதும் (‘‘கம்பனி’’) கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (‘‘தொகுதி’’) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனி மற்றும் தொகுதியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

(i) ஒரு வருடம் முதல் ஐந்து வருட காலப்பகுதிக்கும் மேலாக நிலுவையாக உள்ள பிங்காரா டொவ்ன் & கன்ட்ரி க்ளப்பிடமிருந்து பெறவேண்டிய வட்டி, பெறவேண்டிய ஊழியர் கணக்கு மற்றும் வாடிக்கையாளர் பொறுப்பு வங்கி பிணையாளிக் கணக்கு என்பவற்றுடன் தொடர்புடைய பெறவேண்டிய நீண்ட கால நிலுவை மீதிகளின் மொத்தம் ரூபா 95.28 மில்லியன் அவதானிக்கப்பட்டன.

**நிலுவைக் காலப்பகுதி (வருடங்கள்)**

| **விபரம்** | **0-1** | **1-3** | **3-5** | **05 வருடங்களிற்கு மேல்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| | **(ரூபா. மில்லியன்)** | **(ரூபா. மில்லியன்)** | **(ரூபா. மில்லியன்)** | **(ரூபா. மில்லியன்)** | **(ரூபா. மில்லியன்)** |
| பிங்காரா டொவ்ன் அன்ட் கன்ட்ரி க்ளப் | - | - | - | 8.38 | **8.38** |
| ஊழியரகளிடம் இருந்து பெறவேண்டியவை | - | 5.77 | 38.80 | 0.24 | **44.81** |
| வாடிக்கையாளர் பொறுப்பு வங்கி பிணையாளிக் கணக்கு | 31.22 | 10.87 | - | - | **42.09** |
| **மொத்தம்** | **31.22** | **16.64** | **38.80** | **8.62** | **95.28** |

**முகாமைத்துவ கருத்துரை:**

**பிங்காரா டொவ்ன் அன்ட் கன்ட்ரி க்ளப்**

முதலீட்டு ஆதனத்தின் கீழ் பிங்காரா டொவ்ன் & கன்ட்ரி க்ளப் (பிறைவேட்) லிமிட்டட்டிடமிருந்து பெற வேண்டிய வட்டியே இதுவாகும்.

2014 மே முதல் 2014 ஒக்தோபர் வரை வட்டியினை அட்டுறுவாக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 110,000,000 மூலதனத்துடன் அறவீடு செய்வதற்கு சட்ட வழக்கு செயல்படுத்தப்பட்டுள்ளது.

பெறவேண்டிய வட்டியாக ரூபா 8,380,000 முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஊழியரகளிடம் இருந்து பெறவேண்டியவை**

** 05 வருடங்களுக்கு மேற்பட்டவை*

2024 மார்ச் மாதத்தில் சபை அங்கீகாரத்துடன் ரூபா 235,500 தொகை பதிவளிப்பு செய்யப்பட்டுள்ளது.

***** *கந்தான மோசடி - ரூபா 37,160,000*

இதுவொரு கந்தான கிளையின் நிலையான வைப்பு மோசடியுடன் தொடர்புடையதாகும். தற்போதும் சட்ட வழக்கு செயற்பாட்டின் கீழ் உள்ளது.

** பதவியைத் துறந்த ஊழியரான திரு. பி.ஜி.ஜி. நிலங்க என்பவரிடமிருந பெறவேண்டிய தொகை- ரூபா 296,000*

சட்ட பெறுபேறு காரணமாக தீர்ப்பனவு நிலுவையில் உள்ளது.

** செல்வி ஆர்.ஏ.ஏ. பெரேராவின் உரிமைக்கோரிக்கை கொடுப்பனவு - ரூபா 1,347,300*

குறிப்பிட்ட விடயத்தை விசாரிப்பதற்காகவும், நட்டத்தினை அறவீடு செய்வதற்காகவும் சீ.ஐ.டீ இல் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதேபோன்று வாகனத்தினை விற்பதற்கும், மீதிகளினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

** காலிக் கிளையின் வின்டோ கடன்கொடுத்தோரிடமிருந்து பெறவேண்டியவை - ரூபா 839,950.94*

2024 யூலை மாதத்தில் சபை அங்கீகாரத்துடன் பதிவளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**பரிந்துரை:**

நீண்டகாலமாக பெறவேண்டிய நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது

* ஈசீஓ கபானா (ECO Cabana) இன் கடன் தீர்த்தல் - ரூபா 2,673,905.65

காலி எஸ்சீஐபி (SCIB) இல் நடவடிக்கை தாக்கல் செய்யப்பட்டது. சட்ட பெறுபேறு காரணமாக தீரப்பனவு நிலுவையில் உள்ளது.

** அனுராதபுர கிளையின் அடகுச் பொருட்கள் மோசடி - ரூபா 2,256,211.07*

அனுராதபுர காவல் நிலையம் மற்றும் அனுராதபுர நீதிமன்றம் என்பவற்றில் விசாரணையொன்றும், நீதிமன்ற வழக்கொன்றும் செயல்பாட்டில் உள்ளன. பொருள் தொடர்பான வழக்கு காரணமாக சில தஙக பொருட்கள் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் உள்ளன. நீதிமன்ற வழக்கு நடைபெற்று வருவதுடன் சட்ட வழக்கு நிறைவடையும் வரை முடிவுறுத்துதல் நிலுவையாக உள்ளது.

### 1.5.2 செலுத்த வேண்டியவைகள்

**கணக்காய்வு விடயம்**

(i) 1 வருடம் முதல் ஐந்து வருட காலப்பகுதிக்கும் மேலாக நிலுவையாக உள்ள இனங்காணப்படாத நேரடி வைப்பு, சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு, வாடிக்கையாளர் சேகரிப்பு கணக்கு, திட்டமிடப்படாத கொடுப்பனவு சேகரிப்பு, உயிரிழந்த வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டிய வைப்பு, அட்டுறு செலவினங்கள் மற்றும் தவணைக்காசு விடுவித்தல் கணக்கு என்பன தொடர்பாக நீண்டகாலமாக செலுத்தவேண்டிய நிலுவை மீதிகளின் மொத்தம் ரூபா 143.74 மில்லியன் அவதானிக்கப்பட்டது. நீண்டகாலமாக செலுத்த வேண்டிய நிலுவை மீதிகளின் வயதுப் பகுப்பாய்வு பின்வரும் அட்டவணையில் வழங்கப்படுகின்றது.

| விபரம் | நிலுவைக் காலப்பகுதி (வருடங்கள்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 0-1 | 1-3 | 3-5 | 05 வருடங்களிற்கு மேல் | மொத்தம் |
| | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) |
| இனங்காணப்பாத நேரடி வைப்புக்கள | 2.32 | 6.78 | 5.12 | - | 14.22 |
| சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு | 0.63 | 0.14 | 0.65 | 1.98 | 3.40 |

**முகாமைத்துவ கருத்துரை**

**இனங்காணப்படாத நேரடி வைப்பு**

எங்களின் வங்கிக் கணக்குகளுக்கு வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட இனங்காணப்படாத வைப்புக்களினை இது உள்ளடக்குகின்றது.

காணப்படுகின்ற தகவலைக் கொண்டு இனங்காண்வதற்காக அவைகளினை வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நீண்டகால நிலுவை மீதிகள் கொள்கையின் பிரகாரம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கணக்குப் புத்தகங்களில் இருந்து மீதிகள் நீக்கப்படும் என்பதனால் 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய மீதிகள் 2024 ஆம் ஆண்டில் தீர்க்கப்படும்.

உரிய கிளையினால் வாடிக்கையாளரினை அடையாளங்காணும் வரை 2019 ஆம் ஆண்டிற்கு பின் பெறப்பட்ட வைப்புக்களினை கணக்குப் புத்தகங்களில் பேணப்பட வேண்டியுள்ளதோடு நிதிகளினை சம்பந்தப்பட்ட வசதிக்கு மாற்றுவதற்கு நிதிப் பிரிவிற்கு அங்கீகாரத்துடன் அதேபோன்று அனுப்பப்டும்.

**சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவுகள்**

**பரிந்துரை**

நீண்டகாலமாக செலுத்தவேண்டிய நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மற்றும் கம்பனியின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்றுவதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாடிக்கையாளர் சேகரிப்பு கணக்கு | 5.27 | 1.68 | 0.12 | 100.44 | 107.51 |
| திட்டமிடப்படாத கொடுப்பனவு சேகரிப்பு | 1.02 | 0.12 | 0.005 | - | 1.15 |
| உயிரிழந்த வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய வைப்பு | 1.29 | 0.3 | 0.6 | - | 2.19 |
| அட்டுறு செலவினங்கள் | 12.02 | 0.04 | 0.04 | - | 12.1 |
| தவணைக்காசு விடுவித்தல் கணக்கு | - | 3.17 | - | - | 3.17 |
| **மொத்தம்** | **22.55** | **12.23** | **6.54** | **102.42** | **143.74** |

கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டும் ஆனால் 6 மாதத்திற்கு மேலாக சமர்ப்பிக்கப்படாதவைகள் இந்தக் கணக்கிற்கு மாற்றப்படும்.

பொறுப்புக் கணக்கிற்கு மாற்றுகின்ற நேரத்திலேயே பொறுப்பினை தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அந்த தகவல் அனுப்பப்படும்.

இந்த நிலுவைகளினை தீர்ப்பதற்கு தேவைப்படும் போது தொடர்ந்து வரும் கொடுப்பனவுகள் பதிவிடப்படும்.

தற்போதுள்ள நீண்டகால நிலுவை மீதிகள் கொள்கையின் பிரகாரம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கணக்குப் புத்தகங்களில் இருந்து மீதிகள் அகற்றப்படும் என்பதனால் 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய மீதிகள் 2024 ஆம் ஆண்டில் தீர்க்கப்படும்.

**வாடிக்கையாளர் சேகரிப்பு கணக்கு**

ரூபா 100 மில்லியன் தொகையுடைய நவாரா கெபிடல் லிமிட்டட்டினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்ட வழக்குடன் தொடர்புடைய பிரதான கூறாகும். சட்ட வழக்கு முடிவுறுத்தப்படும் வரை இந்த தொகையினை கணக்குப் புத்தகங்களில் வைத்திருக்கப்பட வேண்டும்.

2017 - திருப்பப்பட்ட நிலையான வைப்புச் சீட்டு ரூபா 18,340 தொகை 2024 ஜனவரி மாதத்தில் தீர்க்கப்படும்.

தொகுதிக்கடன் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய ரூபா 426,580.82 தொகை உயிரிழந்த வாடிக்கையாளருக்கு சொந்தமானதாகும். நீதிமன்ற கட்டளை ஊடாக இந்த நிதிகளினை அவரது வாரிசுகள் கோரலாம். பெருநிறுவன ஆலோசனை மற்றும் மூலதன சந்தைகள் திணைக்களத்தினால் வழக்கமான அடிப்படையில் இது பின்பற்றப்பட்டு வருகின்றது.

வாடிக்கையாளரினால் வசதிகளினை

தீர்ப்பனவு செய்த பின்னர் ஏனைய சில மிகுதி மீதிகள் காணப்படுகின்றன. சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரிடமிருந்து உறுதிப்படுத்தல்களினை பெறுகின்ற போது கணக்குப் புத்தகங்களில் இருந்து தொகைகளினை நீக்கப்படும். தற்போதுள்ள நீண்டகால நிலுவை மீதி கொள்கையின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டினுள் 2019 ஆம் ஆண்டின் மீதிகள் நீக்கப்படும்.

**திட்டமிடப்படாத கொடுப்பனவு சேகரிப்பு**

3 – 5 ஆண்டு நிரலில் உள்ள ரூபா 4,500 மீதி 2024 ஆகஸ்ட் இல் நீக்கப்படும்.

ரூபா 122,400 தொகையானது 4548218 இலக்கமுடைய வாகனக் கடனின் அகற்றல் தொடர்பில் மேலதிகமாக சேகரிக்கப்பட்டதில் இருந்து கிடைத்ததாகும்.

8055317, 8763981, 7718901, 7412119 ஆம் வாகனங்கள் அகற்றல் தொடர்பில் சேகரிக்கப்பட்ட மேலதிகமான ரூபா 1,023,000 ஆகும்.

2024 ஆகஸ்ட் இல் இந்த சகல மீதிகளும் நீக்கப்படும.

**உயிரிழந்த வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய வைப்பு**

ரூபா 377,740.55 தொகையுடைய தீர்ப்பனவின் சட்ட பெறுபேறு நிலுவையில் உள்ளது.

முன்மொழியப்பட்டவருக்கு செலுத்த வேண்டியது ரூபா 144,480.12 ஆகும். ஞாபகமூட்டல் அனுப்பப்பட வேண்டும்.

ரூபா 493,861.10 மீதிக் கொடுப்பனவு இரண்டாவது சட்டபூர்வ வாரிசுக்கு (வெளிநாடு) செலுத்த வேண்டியுள்ளது.

ரூபா 647,587.55 - சட்ட ஆவணங்களினை இறுதியாக்குவதற்கு கோரி நிர்வாகத்தினருக்கு அனுப்பப்பட வேண்டியுள்ளது.

ரூபா 525,931.30 – சட்டரீதியான வாரிசுகளினை தொடர்புகொள்ள

முடியாதுள்ளது. மீதிகளினை தீர்ப்பதற்கு தேவையான ஆவணங்களினை சமர்ப்பிக்குமாறு உயிரிழந்தவரின் வாடிக்கையாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட வேண்டியுள்ளது.

**அட்டுறு செலவினங்கள்**

3 – 5 வருட நிரலிலுள்ள ரூபா 35,700 தொகை வரி ஆலோசனைக்காக அமரசேகர & கம்பனிக்கு செலுத்த வேண்டியதாகும்.
கொடுப்பனவினை இணக்கம் செய்த பிற்பாடு 2024 திசெம்பர் மாதத்திற்கு முன்பு நீக்கப்படும்.

1 – 3 வருட நிரலிலுள்ள ரூபா 41,900 தொகை மின்பிறப்பாக்கிக்காக நடிவேவேய்க்கு செலுத்த லேண்டியதாகும்.
கொடுப்பனவினை இணக்கம் செய்த பிற்பாடு எஸ்எஸ் பிரிவினால் 2024 திசெம்பர் மாதத்திற்கு முன்பு மேலதிக ஏற்பாடு நீக்கப்படும்.

0-1 வருட நிரலிலுள்ள ரூபா 12,025,500 தொகையானது 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டுப் பொதுக்கூட்டம் மற்றும் வருடாந்த அறிக்கைகளினை அச்சு செய்தல், மனித வள பணிக்கொடை, விடுமுறை பணமாக்குதல், அடகு வைத்தல் தொடர்பில் காப்புறுதி, எம்கேஸ் மற்றும் முகவர் கழிவுக் கொடுப்பனவு என்பவற்றுடன் தொடர்புடையதாகும்.

**தவணைக்காசு விடுவித்தல் கணக்கு**

2024 பெப்ரவரி மாதத்தில் நிலையான வைப்பு பிரிவு இந்த மீதியினை நீக்கியுள்ளது.

### 1.5.3 முற்பணங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை மீதிகள் ரூபா 1,075.34 மில்லியன் இருந்ததுடன் அந்த திகதியில் உள்ளவாறான கம்பனியின் மொத்த செயல்பாடற்ற கடன்கள் மற்றும் | 1. **கோர்பரேட் ரிஸ்க் மெனேஜ்மன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்** இந்த அறிக்கையின் 3.2 இல் உள்ள செயல்பாட்டு வினைத்திறனின்மைகள் (iv) இன் | வாடிக்கையாளர்களிடம் இருந்து மொத்த நிலுவைத் தொகைகளினை அறவிடுவதற்கு கம்பனியினால் திருப்திகரமான |

முற்பணங்களில் 16.44 சதவீதத்தினை இது பிரதிபலிக்கின்றது. விபரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| இல. | வாடிக்கையாளரின் பெயர் | செலுத்த வேண்டிய மொத்தத் தொகை (ரூபா.மில்லியன்) |
|---|---|---|
| 1 | கோர்பரேட் ரிஸ்க் மெனேஜ்மன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 245.57 |
| 2 | எம்/எஸ் கென்ட் ஹைட்ரோ (பிறைவேட்) லிமிட்டட் | 194.33 |
| 3 | ஏ பி ஏ ஜுவலரி (பிறைவேட்) லிமிட்டட் | 163.75 |
| 4 | மெக் ஸ்டோரெஜ் பெட்டரி (பிறைவேட்) லிமிட்டட் | 142.62 |
| 5 | வோல்கர்ஸ் சன்ஸ் அன்ட் கம்பனி என்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 81.05 |
| 6 | தயா க்ரூப் (பிறைவேட்) லிமிட்டட் | 79.97 |
| 7 | ப்ளான்டேஷன் டிவெலப்மென்ட் அன்ட் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட் | 52.34 |
| 8 | டொக்டர். யூ.ஜீ.ஏ பெர்னான்டோ | 42.05 |
| 9 | சீகிரிய வைஸ்ரோய் ஹோடல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 39.11 |
| 10 | அனுர மேன் பவர் சப்லையர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 34.55 |
| **மொத்தம்** | | **1,075.34** |

கீழ் பதில் வழங்கப்பட்டுள்ளது.

**2. எம்/எஸ் கென்ட் ஹைட்ரோ (பிறைவேட்) லிமிட்டட்**

2023.09.08 இல் கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தீர்ப்பனவுசெய்வது தொடர்பாக நடைபெற்று வருகின்ற கலந்துரையாடல் காரணமாக அறவிடுதல் திணைக்களம் நடவடிக்கை எடுப்பதிலிருந்து தடுப்பதற்கு சட்ட திணைக்களத்தினை கோரியுள்ளது.

வாடிக்கையாளர் ஒவ்வொரு மாதமும் ஒரு தவணைக்கொடுப்பனவினை செலுத்தி வருகிறார். முழுமையாக தீர்ப்பதற்கு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**3. ஏ பி ஏ ஜுவலரி (பிறைவேட்) லிமிட்டட்**

1டி மற்றும் 4டி – டிக்ரி நிஸி (DECREE NISI) முழுமையாக்கப்பட்டதுடன் 2டி மற்றும் 3டி – வெளிநாட்டு முகவரி தொடர்பில் அறிவித்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தீர்ப்பனவு செய்யும் திட்டத்தினை வாடிக்கையாளருடன் கலந்துரையாடப்பட்டு ரூபா 92 மில்லியன் சேகரிக்கப்பட்டுள்ளது.

**4. மெக் ஸ்டோரெஜ் பெட்டரி (பிறைவேட்) லிமிட்டட்**

தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்ட வழக்குகளின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றது.

**5. வோல்கர்ஸ் சன்ஸ் அன்ட் கம்பனி என்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**

முறையே 2024.08.02 மற்றும் 2024.02.19 இல் 2 வெவ்வேறு வழக்குகளின் சாதகமாக தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது.

நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ரூபா 100 மில்லியன் தொகையுடைய மறுகொடுப்பனவு திட்டத்தினை சபை அங்கீகாரத்துடன் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டு ரூபா 05 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டுள்ளது.

**6. தயா க்ரூப் (பிறைவேட்) லிமிட்டட்**

2024.06.11 இல் தீர்ப்பனவின் விதிமுறைகள் உள்ளிடப்பட்டுள்ளது.

ரூபா 78.50 மில்லியனுக்காக நீதிமன்றத்தில் தீர்ப்பனவு திட்டம் உள்ளிடப்பட்டு இது வரை ரூபா 10 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டுள்ளது.

**7. ப்ளான்டேஷன் டிவெலப்மென்ட் அன்ட் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்**

இந்த அறிக்கையின் 3.2 இல் உள்ள செயல்பாட்டு வினைத்திறனின்மைகள் (vii) இன் கீழ் பதில் வழங்கப்பட்டுள்ளது.

**8. டொக்டர். யூ.ஜீ.ஏ பெர்னான்டோ**

2024.11.05 இல் மேலதிக விசாரணை உள்ளது.

**9. சீகிரிய வைஸ்ரோய் ஹோடல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**

இந்த அறிக்கையின் 3.2 இல் உள்ள செயல்பாட்டு வினைத்திறனின்மைகள் (vi) இன் கீழ் பதில் வழங்கப்பட்டுள்ளது.

**10. அனுர மேன் பவர் சப்லையர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**

இந்த அறிக்கையின் 3.2 இல் உள்ள செயல்பாட்டு வினைத்திறனின்மைகள் (viii) இன் கீழ் பதில் வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.4 தகவல் தொழில்நுட்ப (IT) பொதுக் கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தொழிற்பாட்டு செயன்முறையினை மீட்டெடுப்பதற்காக கொம்வோல்ட் (Commvault) மீட்டெடுப்பு முாகமைத்துவ கருவியை கம்பனி பயன்படுத்துவதுடன் இது ஒரு அண்மைய பதிப்பு அல்ல. தரவு முறிவுகளின் சாத்தியம் அதிகரிப்பதன் மூலம் முக்கியமான இற்றைப்படுத்தல்கள் மற்றும் சேர்ப்புக்கள் கிடைக்காமல் விடக்கூடும். | கணக்காய்வாளர்களினால் எழுப்பிய கவனத்தினை நிவர்த்தி செய்வதற்கும், ஏனைய சில தொழிற்பாட்டு பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதற்கும் நாங்கள் தற்போது புதிய மீட்டெடுக்கும் தீர்வினை கொள்வனவு செய்யும் செயற்பாட்டில் உள்ளோம்.<br><br>2024 திசெம்பர் 31 அளவில் நடைமுறைப்படுத்தலை பூர்த்திசெய்வதற்கு நாங்கள் திட்டமிட்டு வருகின்றோம் | தரவு தொழிற்பாட்டு செயற்பாட்டு மீட்டெடுப்பினை முன்னேற்றுவதற்கு தகவல் தொழில்நுட்ப முறைமையின் அண்மைய பதிப்பினை பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.<br><br>. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 20.8 மில்லியன் இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 495.6 மில்லியனாக காணப்பட்டது. ஆகையினால் நிதி விளைவுகளில் ரூபா 516.4 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 714.9 மில்லியனால் மொத்த செயற்பாட்டு வருமானம் அதிகரித்தமையே முன்னேற்றத்தக்காக பிரதான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2023 (ரூபா '000) | 2022 (ரூபா '000) | மாற்றம் (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| வட்டி மற்றும் ஒத்த வருமானம் | 6,559,123 | 6,451,083 | 1.67 | பிரதானமாக இலாப நட்டத்தின் ஊடாக (FVTPL) நியாயமான பெறுமதியில் நிதி முதலீடுகள் மற்றும் வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களுடன் கடன்வழங்கல் என்பவைகள் அதிகரித்தமை காரணமாக வட்டி வருமானம் சற்று அதிகரித்துள்ளது. |
| வட்டி மற்றும் ஒத்த செலவினங்கள் | 4,918,658 | 4,695,684 | 4.75 | வைப்பு அடிப்படை மற்றும் கம்பனியின் கடன் பெறல் என்பவை அதிகரித்தமை காரணமாக வட்டிச்செலவு அதிகரித்துள்ளது. |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 123,292 | 129,157 | (4.54) | பிரதானமாக வியாபார மற்றும் ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகள் குறைவடைந்தமை காரணமாக கட்டணம் மற்றும் தரகு வருமானம் குறைவடைந்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| தேறிய வியாபார வருமானம் | 120,243 | 3,658 | 3,187.0 | இலாபம் அல்லது நட்டம் (FVTPL) ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்களின் அகற்றல் மீது இலாபத்தினை உள்ளடக்கிய வியாபார நடவடிக்கைகளில் இருந்து பெறுபேறு அதிகரித்தது. |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 116,167 | 90,826 | 27.90 | ஆதன மற்றும் உபகரண அகற்றல் தொடர்பில் இலாபம், இணைநிறுவனத்திடம் இருந்து பங்கிலாப வருமானம் மற்றும் ஏனைய வருமானம் ஆகியவைகள் அதிகரித்த அதேவேளை ஆதன வியாபாரத்தில் இருந்தான இலாபம் அல்லது நட்டம் குறைவடைந்தமையினால் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. |
| கடன்களுக்கான நட்டக்கழிவு கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | 25,094 | 16,504 | 52.05 | பிரதானமாக தனியாள் குறிப்பிடத்தக்க கடன்கள் மீது நட்டக்கழிவு மற்றும் கூட்டு கடன்களின் மீது கணிப்பிடப்பட்ட நட்டக்கழிவு என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாகவும் பதிவளிப்பில் ஏற்பட்ட குறைவு காரணமாகவும் கடன் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான நட்டக்கழிவுக் கட்டணங்கள் அதிகரித்துள்ளது. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கிய விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட துறை விகிதங்களின் ஒப்பீட்டுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **துறை விகிதம் *** | **கம்பனி 2023** | **2022** |
|---|---|---|---|
| **செயலாற்றல் விகிதங்கள்** | | | |
| உரிமை மீதான திரும்பல் (ROE) | 12.09 | 0.57 | (12.60) |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) | 4.23 | 0.06 | (1.51) |
| வட்டி எல்லை | 7.74 | 5.55 | 5.85 |
| **சொத்துக்கள் தர விகிதம்** | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் (NPL) | 17.76 | 19.32 | 17.77 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | |
| தட்டு மூலதனம் (ஆகக் குறைந்தது 8.5%) | 21.13 | 13.60 | 11.33 |
| மொத்த மூலதனம் (ஆகக் குறைந்தது 12.5%) | 22.33 | 16.75 | 12.01 |
| **நியதிச்சட்ட விகிதம்** | | | |
| திரவச் சொத்துக்கள் விகிதம் | 14.09 | 11.59 | 13.41 |

* **நிதித்துறை – உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் கீழ் உள்ள இலங்கை மத்திய வங்கி வலைதளத்தில் இருந்து துறை விகிதங்கள் பெறப்பட்டன.**

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்படாத நட்டங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | மீளஅறவிடமுடியாமை காரணமாக இயக்குனர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 64.09 மில்லியன் பெறுமதியுடைய 127 எண்ணிக்கையிலான செயல்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களினை கம்பனி பதிவளித்துள்ளது. | சபை அங்கீகரித்த பதிவளிப்பு கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டிகளின் பிரகாரம் நீண்டகாலமாக பெறப்படாத கொடுப்பனவுகள் அல்லது பாதுகாப்பற்ற அகற்றல் மீதிகள் போன்ற வசதிகளினை பதிவளிப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானிக்கின்றது.<br><br>எவ்வாறாயினும், பதிவளிப்பதற்கு முன்பாக செலுத்தவேண்டியுள்ள நிலுவைகளினை சேகரிப்பதற்கு சாத்தியமான சகல அறவீட்டு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதோடு, வசதியனை முழுமையாக தீர்க்கும் வரை மேலதிமாக சட்ட செயன்முறைகள் தொடரப்படும். | பதிவளிப்பதற்கு முன்பாக கடன்கள் மற்றும் முற்பணங்களினை அறவீடு செய்வதற்கு ஒவ்வொரு சாத்தியமான முயற்சியையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | 2023 ஆம் ஆண்டின் போது பறிமுதல் செய்யப்பட்ட நூற்றுப் பதின்மூன்று (113) வாகனங்களினை விற்பனை செய்துள்ளது. எனினும் மேற்குறிப்பிட்ட 113 வாகனங்களில் 98 வாகனங்கள் மதிப்பீட்டு அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள கட்டாய விற்பனைப் பெறுமதியை விடவும் குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கம்பனிக்கு மொத்த நட்டமாக ரூபா 18.05 மில்லியன் என கணிப்பிடப்பட்டுள்ளது. | வாகன தரிப்பிட செயற்பாடுகள் நடைமுறையில் வழங்கப்பட்டுள்ள அளவுருக்களினுள் கம்பனி அதன் மீளப்பெறப்பட்ட வாகனங்களினை அகற்றியது.<br><br>எனினும், கட்டாய விற்பனை பெறமதியினை விட 20 சதவீதம் குறைவாக வாகனங்கள் அகற்றப்பட்ட போதிலும் பெரும்பாலும் அனைத்து வாகனங்களினையும் பரிவர்த்தனை இலாபத்தில் அகற்றுவதற்கு கம்பனி முகாமைத்துவம் செய்தது. மேலும், வழமையான மதிப்பீடுகளினை விட ஒப்பீட்டளவில் மீளப்பெறப்பட்ட வாகனங்களின் உண்மையான சந்தைப் பெறுமதி குறைவாகும். தரிப்பிட செயற்பாடுகள் நடைமுறையின் பிரகாரம் கட்டாய விற்பனை விலையின் 80 சதவீதத்திற்கு மேல் வாகனங்களினை அகற்றுவதற்கு அகற்றல் குழு தீர்மானித்தது.<br><br>நிலவுகின்ற நெருக்கடியான நேரத்தின் போது சொத்துக்களினை தேறல் செய்வது சாத்தியமானதொரு பொருளாதார தீர்மானமாகும் மற்றும் அறவிடல் செயன்முறை ஊடாக வாடிக்கையாளரிடம் | பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் விற்பனையில் இருந்து கம்பனிக்கு ஏற்படும் நட்டங்கிளினை குறைக்க நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | இருந்து பற்றாக்குறையினை அறவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது எனக்கருதி அத்தகைய அகற்றல் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது. | |
| (ii) | கம்பனி பாதுகாப்பு பிணையாக 23 வாகனங்களினை வைத்திருந்து மொத்தமாக ரூபா 30.27 மில்லியனுக்கு குத்தகை வசதிகளினை வழங்கியதுடன் இவைகள் பறிமுதல் செய்யப்பட்ட பிற்பாடு 2023 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டன. எனினும், ரூபா 15.71 மில்லியன் மாத்திரமே பெறப்பட்டதுடன் வாடிக்கையாளரிடம் இருந்து இன்னும் மிகுதி ரூபா 14.56 மில்லியன் அறவிடவேண்டியுள்ளது. ஆகையினால், கம்பனியானது வாகனங்களினை அகற்றல் செய்த பிற்பாடும் குறைந்தபட்சம் விடுவிக்கப்பட்ட தெகையையேனும் அறவிட இயலவில்லை. வாடிக்கையாளர்களிடம் இருந்து மேற்குறிப்பிட்ட தொகையினை அறவிடமுடியாமல் போகும் பட்சத்தில் கம்பனிக்கு நட்டம் ஏற்படலாம் என அவதானிக்கப்பட்டது. | வாடிக்கையாளர்களினால் பெறப்பட்ட வசதிகளின் பெரும்பகுதியானது நிர்மாண நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சேவைகளினை வழங்குவதற்காகும். தொற்றுநோய்க்கு முன்பாக இந்த வசதிகள் வழங்கப்பட்டதுடன் இவைகள் நிலவிய சந்தை நிலமை காரணமாக வாகனங்களின் நிலைகளில் குறைவு மற்றும் முனைவுப்பெறுமதியின் குறைவு ஆகியவற்றில் விளைவை ஏற்படுத்தியது. எனினும், நேரடி இணக்கப்பாடுகள், வெளியாள் முகவர்கள் மற்றும் சட்டபூர்வ செயன்முறைகள் போன்ற அறவீட்டு செயன்முறைகள் ஊடாக வாடிக்கையாளர்களிடம் இருந்து மீதிகளினை அறவீடு செய்வதற்கு சகல சாத்திய நடவடிக்கைகளையும் முகாமைத்துவம் எடுத்துக்கொண்டு வருகின்றது. | கம்பனிக்கு சாத்தியமான நட்டங்களினை குறைக்கும் விவேகமான முறையில் தீர்மானங்களினை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iii) | தரிப்பிடத்தில் உள்ள பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களினை அகற்றும் போது குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. 2024 மே 31 இல் உள்ளபடியான தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட 115 வாகனங்களில் 65 வாகனங்கள் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இது பல ஆண்டுகளுக்கு மேலாக அதிக பராமரிப்புக் கிரயங்கள் ஏற்படுத்தக்கூடும் என்பதோடு சந்தைப் பெறுமதி குறைவடைந்து நட்டங்களும் ஏற்படக்கூடும். வாகனங்களின் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காலப்பகுதியுடன் தொடர்புடைய விபரங்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.<br><br>**தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி** — **வாகனங்களின் எண்ணிக்கை**<br>1 – 3 வருடங்கள் — 19<br>3 – 5 வருடங்கள் — 09<br>05 வருடங்களுக்கு மேல் — 37<br>**மொத்தம்** — **65** | பட்டியலில் உள்ள 65 வாகனங்களில் 52 வாகனங்கள் நீதிமன்ற பிணைப்பில் உள்ளதுடன் நீதிமன்றங்களினால் பிணைப்பு ரத்து செய்யப்படும் வரை இந்த வாகனங்களினை அகற்ற முடியாதுள்ளது.<br>வாடிக்கையாளர்களிடம் இருந்து ஆர்எம்வி (RMV) ஆட்சேபனைகள் உள்ளமை காரணமாக 03 வாகனங்களினை வாடிக்கையாளர் ரத்துசெய்வதை பாதிக்கும் வரை இவைகளை அகற்ற முடியாதுள்ளதுடன், பட்டியலில் உருப்படியாகவுள்ள 01 வாகனம் அகற்றப்பட்டு அதற்கேற்ப விடுவிக்கப்பட்டுள்ளது. 2024 ஆகஸ்ட் 16 ஆம் திகதி தம்புள்ளை தரிப்பிடத்தில் மிகுதி 09 வாகனங்களினை ஏலத்தின் ஊடாக அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான சபை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. | நீதிமன்றத்தின் மூலம் பிணையினை தீர்வுசெய்வதற்கு ஒவ்வொரு முயற்சியினை எடுப்பதற்கும் கம்பனிக்கு குறைந்தளவான நட்டம் ஏற்படும் வண்ணம் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களினை அகற்றுவதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| (iv) கம்பனியானது 2019 முதல் 2021 வரை கோர்பரேட் ரிஸ்க் மெனேஜ்மன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு பல தடவை குறுகிய தவணை கடன்கள், சலுகைக் கடன் வசதிகள் என்பவற்றினை வழங்கியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் வாடிக்கையாளரின் கொடுப்பனவு வரலாற்றினை கருத்திற்கொள்ளாமல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளரின் சீரற்ற கொடுப்பனவு முறைமை மற்றும் வாடிக்கையாளரின் வேண்டுகோள் என்பவற்றிற்கு அமைவாக கம்பனியானது மேற்கூறிய அனைத்து கடன்களினையும் ஒரே கடனாக ரூபா 250.32 மில்லியனுக்கு மாற்றியதன் மூலம் வசதிகளினை மீள்கட்டமைத்தது. மீள்கட்டமைக்கப்பட்ட வசதி தொடர்பாக பின்வரும் அதவானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | கடன் வசதிகளினை வழங்கும் போது சரியான முறையில் கடன் கொள்கை அறிவுறுத்தல்கள் மற்றும் ஆவணங்களின் துல்லியம் என்பன மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |
| • கடன் நடைமுறை கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டிகளுக்கு முரணாக இயக்குனர் சபையின் அங்கீகாரத்துடன் கட்டாய விற்பனைகள் பெறுமதியினை (FSV) விஞ்சி மொத்த கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. | இயக்குனர் சபை அங்கீகரித்துள்ளது. | |
| • கம்பனியானது கடன்பெறும் கம்பனியின் நிதி நிலைமையினை மதிப்பீடு செய்வதற்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களினை பெறவில்லை. | கருத்துரையுடன் உடன்படுகிறது. | |
| • கம்பனி தனிப்பட்ட உத்தரவாதம் அளிப்பவருக்கு அறிவிக்கவில்லை என்பதுடன் உத்தரவாதம் அளிப்பவருக்கு எதிராக மேலதிக நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை. | கருத்துரையுடன் உடன்படுகிறது. | |
| • மீள்கட்டமைப்பு செயன்முறையின் ஒட்டுமொத்த இடரினை குறைப்பதற்கு கடன் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பின்வரும் தந்திரோபாயங்களை கம்பனி அமுல்படுத்தப்படவில்லை.<br>I. 2020/2021 ஆம் நிதி ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களினை பெறப்பட வேண்டும்.<br>II. எதிர்கால வணிகத் திட்டங்கள், கம்பனியின் தற்போதைய மற்றும் முன்மொழியப்பட்ட வணிக செயற்திட்டங்களின் விபரங்கள் என்பவற்றுடன் சேர்த்து எதிர்வுகூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பெறப்பட வேண்டும். | கருத்துரையுடன் உடன்படுகிறது. | |

| | | | |
|---|---|---|---|
| III. | வசதிகளினை முழுமையாக தீர்ப்பனவு செய்யும் வரை விண்ணப்பதாரர் கம்பனியின் வணிக செயல்திறன், சீஆர்ஐபி (CRIB) அறிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் நிலைமை மீது காலக்கிரம மீளாய்வுகள் நடத்தப்பட வேண்டும். மறுசீரமைக்கப்பட்ட கடனின் 06 மாத காலத்தினுள் முதலாவது மீளாய்வு நடத்தப்பட்டு பிற் கடன் கண்காணிப்பு அலகு அல்லது மத்திய வணிக அலகினால் கடன் குழுவிற்கு அறிக்கை செய்யப்படும். | | |
| (v) | 2014 முதல் 2017 வரை ஆடைச் சந்தையில் பிரபல்யமான சில்லரை வியாபாரியான ரன்ஜனாஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு கம்பனியானது சுழல் மற்றும் தவணைக் கடன் வசதிகளினை வழங்கியது. காணப்படுகின்ற வசதிகளின் மீள்செலுத்துதல் தொடர்ச்சியாக இல்லாமை காரணமாக 2019 ஆகஸ்ட் மாதத்தில் இருந்த தவணைக் கடன்களின் நிலுவை மீதிகளை ரூபா 25.22 மில்லியனாக கம்பனி மறுசீரமைத்தது. மறுசீரமைக்கப்பட்ட வசதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | கடன் வசதிகளினை வழங்கும் போது சரியான முறையில் கடன் கொள்கை அறிவுறுத்தல்கள் மற்றும் ஆவணங்களின் துல்லியம் என்பன மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |
| | • நடைமுறை கையேட்டின் 3.0 ஆம் பிரிவின் பிரகாரம் கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் பின்பற்றப்படவுமில்லை, மற்றும் மறுசீரமைப்புக்கு முன்பாக கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை பகுதி முறையாக மேற்கொள்ளப்படவில்லை. | கருத்துரையுடன் உடன்படுகிறது. | |
| | • முறையாக உத்தரவாதம் அளிப்பவர் தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. | கருத்துரையுடன் உடன்படுகிறது. | |
| | • கம்பனியானது கடன்பெறும் கம்பனியின் நிதி நிலைமையினை மதிப்பீடு செய்வதற்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களினை பெறவில்லை. | கருத்துரையுடன் உடன்படுகிறது. | |
| | • மறுசீரமைக்கப்பட்ட பிற்பாடு கடன் பெற்ற நிறுவனம் 03 தவணைக்கொடுப்பனவினை செலுத்தியுள்ளதுடன், 2023 திசெம்பர் | ஒவ்வொரு மாதமும் ரூபா 500,000 தொகையிலான மூலதன மீள்கொடுப்பனவினை கம்பனி தொடர்ந்து செலுத்தி வருகிறது. | |

| | | | |
|---|---|---|---|
| | மாதத்தில் கோரிக்கை கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் ரூபா 500,000 தொகையிலான மூலதன மீள்கொடுப்பனவினை 2024 பெப்ரவரி மாதம் முதல் கம்பனி தொடர்ந்து செலுத்தி வருகிறது. | அதன்படி 2024 பெப்ரவரி முதல் ரூபா 3.5 மில்லியனை ஏற்கனவே செலுத்தியுள்ளது. | |
| (vi) | 2010 மே இல் கம்பனியானது சீகிரிய வைஸ்ரோய் ஹோடல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு ரூபா 34.14 மில்லியன் தவணைக் கடன் வசதியொன்றை வழங்கியது. 2014 திசெம்பர் மாதத்தில் வசதியானது செயற்பாடற்ற வகைக்கு (NPA) மாற்றப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | வாடிக்கையாளர் அல்லது உத்தரவாதம் அளித்தவரிடமிருந்து கம்பனியினால் மொத்த நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| | • ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் கட்டாய விற்பனை பெறுமதியை விட வழங்கப்பட்ட கடன் தொகை உயர்வாக இருந்தது. | கருத்துரையுடன் உடன்படுகிறது | |
| | • பாதுகாப்பிற்காக ஈடுவைக்கப்பட்ட ஆதனம் உரிமை தொடர்பாக சில சட்ட பிரச்சனைகளை கொண்டிருந்தது. | கருத்துரையுடன் உடன்படுகிறது. | |
| (vii) | இலங்கையில் உள்ள தென்னை வியாபாரத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ப்ளான்டேஷன் டிவெலப்மென்ட் அன்ட் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு மொத்தம் ரூபா 52.34 மில்லியன் தொகையில் இரு தவணைக்கடன் வசதிகளினை கம்பனி வழங்கியிருந்தது. கடனுக்கு எதிராக கடன்பிணையாக இரு ஆதனங்களினையும் ஒரு தனிப்பட்ட பிணையாளியினையும் பெற்றுக்கொண்டது. தவணைக்கொடுப்பனவை செலுத்தாமை காரணமாக 2014 திசெம்பர் மாதத்தில் வசதியினை செயல்பாடற்ற முற்பண வகைக்கு மாற்றப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | கடன் வசதிகளினை வழங்கும் போது சரியான முறையில் கடன் கொள்கை அறிவுறுத்தல்கள் மற்றும் ஆவணங்களின் துல்லியம் என்பன மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |
| | • இந்த வசதிகளுக்காக ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் அரசாங்கத்தின் குத்தகை ஆதனங்கள் ஆகும். | கருத்துரைகளுடன் உடன்படுகிறது. | |
| | • கடன்பெற்ற கம்பனியின் இயக்குனரினை கண்டுபிடிக்கப்படவில்லை. | கருத்துரைகளுடன் உடன்படுகிறது. | |

| | | | |
|---|---|---|---|
| (viii) | ஆதனமொன்றினை ஈடாக வைத்து 2010 இல் அனுர மேன் பவர் சப்லையர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு ரூபா 20 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியன் தொகையுடைய இரு வசதிகளினை வழங்கியது. தவணைக்கொடுப்பனவினை செலுத்தாமை காரணமாக 2010 ஆம் ஆண்டில் இது செயல்பாடற்ற முற்பண வகைக்கு மாற்றப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் கடன்பெற்றவர் தானாக முன்வந்து மேற்குறிப்பிட்ட ஆதனத்தினை கம்பனிக்கு மாற்றிக்கொடுத்தார். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | கடன் வசதிகளினை வழங்கும் போது சரியான முறையில் கடன் கொள்கை அறிவுறுத்தல்கள் மற்றும் ஆவணங்களின் துல்லியம் என்பன மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |
| | • நிலத்தின் சட்டரீதியான அணுகல் காணப்படாமை காரணமாகவும், வெள்ளம் உடைய பரப்பினுள் இவை அமையப்பெற்றுள்ளதாலும் மேற்குறிப்பிட்ட ஆதனத்தினை கம்பனியினால் விற்பனை செய்ய முடியவில்லை. | கருத்துரைகளுடன் உடன்படுகிறது. | |
| | • 2022 பெப்ரவரி மாத மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இதன் பெறுமதி பூச்சியமாகும். | கருத்துரைகளுடன் உடன்படுகிறது. | |
| (ix ) | கம்பனியின் மொத்தமாக உள்ள 49 கிளைகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக 40 கிளைகள் மொத்தம் ரூபா 414.64 மில்லியன் நட்டமடைந்துள்ளதை அறிக்கையிடப்பட்டுள்ளது. 28 கிளைகள் தொடர்பாக முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட மொத்த நட்டம் ரூபா 227.16 மில்லியனாக இருந்தன. மீளாய்வாண்டின் போது மொத்த நட்டம் 82.53 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது. மிகுதி 09 கிளைகளின் மூலம் அறிக்கையிடப்பட்ட ரூபா 57.86 மில்லியன் இலாபத்துடன் ஒப்பீடு செய்யும் வேளையில் மீளாய்வாண்டின் போது பெரும்பான்மையான கிளைகள் நட்டமடைந்துள்ளது என்று மேலும் அவதானிக்கப்பட்டுள்ளது. | கருத்துரைகளுடன் உடன்படுகிறது. | நட்டங்களினை அகற்றுவதன் மூலம் கிளைகளின் செயல்திறனை அதிகரிப்பதற்கு தேவையாயன நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் முதிலீட்டு ஆதனங்களில் கீழ் காட்டப்பட்டுள்ள 06 ஆதனங்களில் 04 ஆதனங்களின் உரிமையினை சொந்தமாக்கிக்கொள்வதற்கு சட்ட வழக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு திகதியான 2024 யூலை 31 வரை இவைகள் இறுதியாக்கப்படவில்லை. | 04 ஆதனங்களிற்கும் சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆகஸ்ட் 31 இல் உள்ளபடியாக கூறப்பட்ட வழக்குகள் நடைபெற்று வருகின்றது.<br><br>**மிகுதி 02 முதலீட்டு ஆதனங்கள்**<br><br>1. எம்பிலிபிடிய<br><br>சபை அங்கீகாரத்தின் பிரகாரம் பல்லேகம, எம்பிலிபிடிய ஆதனம் தொடர்பாக எம்பீஎஸ்எல் இன் புத்தகங்களில் காணப்பட்ட ரூபா 1,750,000.00 தொகையினை நாங்கள் பதிவளித்துள்ளோம் என்பதோடு 2024 மே மாதத்தில் எங்களின் புத்தகங்களில் இருந்து பல்லேகம, எம்பிலிபிடிய ஆதனத்தினை அகற்றியுள்ளோம்.<br><br>02. இல. 116/4, 116/7, 116/27, 116/29 – 1வது குறுக்குத் தெரு, கொழும்பு 11<br><br>ரூபா 1,249,000 கொண்டு செல்லும் கிரயத்தில் முதலீட்டு ஆதனமாக எம்பீஎஸ்எல் இன் புத்தகங்களில் கூறப்பட்ட ஆதனம் காட்டப்பட்டிருந்தது. அண்மையில் கிடைத்த சபை அங்கீகாரத்தின் பிரகாரம் லொட் இல. A - 05 , A – 07 மற்றும் A – 09 என்பவற்றிலிருந்து ரூபா 3,981,250 தொகையினை சேகரிப்பாக அறவீடு செய்தது. அதற்கேற்ப 2024 மே மாதத்தில் எங்களின் புத்தகங்களில் இருந்து 1வது குறுக்குத் தெரு, கொழும்பு 11 உள்ள முதலீட்டு ஆதனத்தினை நாங்கள் நீக்கியுள்ளோம். | கம்பனியின் ஆதனங்களினை பயனற்ற விதத்தில் வைத்திருக்காமல் வினைத்திறனான ஒரு முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | பெறப்பட்ட திகதியில் இருந்து முதலீட்டு ஆதனங்கள் மீது எவ்வித வருமானமும் ஈட்டப்படாத போதிலும் கணக்காய்வு திகதியான 2024 யூலை 31 வரை சட்ட செலவினங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு என்வற்றுக்காக முறையே ரூபா 15.3 மில்லியன் மற்றும் ரூபா 46.9 மில்லியன் தொகை கம்பனியினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்காணியும் கட்டிடங்களும் | மேலே குறிப்பிடப்பட்டதற்கு அமைய வழக்குகள் நடைபெற்று வருவதன் காரணமாக பட்டியலில் உள்ள முதலீட்டு ஆதனங்களிற்காக கணக்குகளில் முழுமையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடன் வழங்கலின் ஆரம்பத்தில் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் சட்ட அனுமதியினை திருப்தியடைவதன் மூலம் சட்ட கட்டணத்தினை குறைத்துக் கொள்வதற்கும் மற்றும் இந்த ஆதனங்களின் மூலம் வருமானத்தினை ஈட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | தற்போதும் எவ்வித பயன்பாடின்றி காணப்படுகின்றன. | | எடுப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 ஆம் ஆண்டின் போது நூற்று ஐம்பத்து நான்கு (154) எண்ணிக்கையிலான ஊழியர்கள் கம்பனியில் இருந்து நீங்கிச் சென்றுள்ளனர். 2023 ஜனவரி 01 இல் உள்வாறாக காணப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் 17.18 சதவீதத்தினை இது பிரதிபலிக்கின்றது. இது மீளாய்வாண்டின் போதான கம்பனியின் உயர் ஊழியர் புரள்வினை குறிப்பிடுகின்றது. | நிதி நிறுவனமொன்றுக்கான ஊழியர் புரள்வு விகிதம் 17.18 சதவீதமாக இருப்பது உண்மையில் அதிகம் என நாங்கள் ஒப்புக்கொள்கின்றோம். எனினும், உள்ளக நிறுவன பிரச்சினைக்கு இந்த இராஜினாமாக்களின் பெரும்பான்மை காரணங்களாக இருக்கவில்லை என்று குறித்துக்கொள்ளல் அவசியமாகும். எங்களது பணியாளர் வெளியேறுதல்களின் குறிப்பிடத்தக்களவான பகுதியானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறந்த வாய்ப்புக்களைத் தேடும் தனியாள்களினால் தூண்டப்பட்டது. முதன்மையான ஊக்கப்படுத்தும் காரணியாக உயர் தேறிய சம்பளத்தினை பெறும் நாட்டமாக இருந்ததுடன், 2023 இல் வரி வீதம் அதிகளவு அதிகரித்தமை மிகவும் தாக்கம் செலுத்தியது. வெளியக பொருளாதார காரணியானது பதில் தொழிலினை எங்களின் ஊழியர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமாக ஏற்படுத்தியது. ஊழியர் புரள்வில் பணவீக்க அதிகரிப்பும் முக்கிய பங்குவகித்தது. உணவு, பயணம், மற்றும் தங்குமிட செலவுகள் என்பவவை போன்ற அதிகரித்து செல்கின்ற வாழ்க்கைச் செலவினை குறைத்துக் கொள்வதற்கானதொரு தந்திரோபாயமாக சில ஊழியர்கள் அவர்களது ஊர்களுக்கு அருகிலேயே தொழில்வாய்ப்பினை தேடி தேர்ந்தெடுத்தனர். அவர்களுடைய இடமாற்றம் அவர்களின் நாளாந்த செலவினங்களினை கணிசமாக குறைக்க முடியும் என்று குறிப்பாக இந்தப்போக்கு தொடர்பாக ஊழியர்களுக்கிடையில் உச்சரிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் பேரினப் பொருளாதார நிதி நெருக்கடியானது ஊழியர் சந்தையில் ஆழமாக தாக்கம் செலுத்தியது. அதன் விளைவாக, பெரும்பாலான ஊழியர்கள் சிறந்த ஸ்திரத்தன்மை மற்றும் வாய்ப்புக்களுக்காக வெளிநாட்டிற்கு குடிபெயர்வதற்கு தேர்ந்தெடுத்தனர். மேலதிகமாக, வெளிநாட்டு கல்வி வாய்ப்புக்களை தொடர்வதற்கும், மிகவும் சாதகமான பொருளாதார சூழலில் அவர்களின் தகைமையையும் மற்றும் தொழில் வாய்ப்புக்களினை மேம்படுத்தும் நோக்குடனும் எங்களின் ஊழியர்களின் குறிப்பிட்ட | கம்பனியின் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக ஊழியர் புரள்வினை குறைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கையினர் வெளியேறினர். உயர் ஊழியர் புரள்வின் தாக்கத்தினை நாங்கள் புரிந்து கொள்வததோடு, இந்த சவாலினை எதிர்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை தீவிரமாக அமுல்படுத்தி வருகின்றோம். | |
| (ii) | கம்பனியின் ஊழியர் இடமாற்றக் கொள்கையின் 5.1 ஆம் உட்பிரிவின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு ஊழியரும் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். எனினும், சில கிளைகளில் 05 வருட காலப்பகுதிக்கும் மேலாக ஒரே கிளையில் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என்று அவதானிக்கப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்ட 05 வருட காலப்பகுதிக்கும் மேலாக அதிக காலம் ஒரே கிளையில் ஊழியர்கள் காணப்படுகின்ற சில சந்தர்ப்பங்களில் இந்தக் கொள்கையுடன் இணங்கவில்லை என்று நாங்கள் ஒப்புக்கொள்கின்றோம். இந்த விலகளுக்கான முதன்மைக் காரணங்களானது 2022 இல் நாங்கள் எதிர்கொண்ட சவாலான சூழ்நிலைகளுடன் தொடர்புபடுகின்றன. அந்த ஆண்டின் போது இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட தடைகள் மூலம் எங்களின் வணிக செயற்பாடுகள் குறிப்பிடத்தக்களவு தாக்கம் செலுத்தியதுடன், சீரான ஊழியர் இடமாற்றங்களினை நடைமுறைப்படுத்துவதற்கு எங்களின் இயலுமையை நேரடியாக பாதித்தது. மேலும், நாங்கள் ஆட்சேர்ப்பு முடக்கத்தை சந்தித்ததுடன் அதனால் ஊழியர் பற்றாக்குறைக்கு வழிவகுத்து, இடமாற்றங்களினையும் சுழற்சியினையும் வினைத்திறனாக நடத்துவதற்கு எங்களின் இயலுமைய இது மட்டுப்படுத்தியது. இந்தப் பிரச்சினையின் கலவையாக அதிக ஊழியர் விலகல் வீதங்கள் மற்றும் பணியாளர் எண்ணிக்கை குறைவடைந்தமை காணப்பட்டதுடன் இது இடமாற்றக் கொள்கையினை அமுல்படுத்துவதை மிகவும் கடினமாக்கியது. இதற்கு மேலதிகமாக, இந்தக் காலப்பகுதியின் போது பொருளாதார நெருக்கடி மற்றும் உயர் பணவீக்கம் என்பவற்றின் மூலம் வாழ்க்கைச் செலவு அதிகரித்தமையினால் ஊழியர்கள் அவர்களின் வீட்டிலிருந்து வெளிக் கிளைகளுக்கு அல்லது பதவிகளுக்கு இடமாறிச்செல்ல தயக்கம் காட்டுவதற்கு பங்களிப்பு செய்தது. நாங்கள் இந்த சவால்களினை எதிர்கொள்வதற்கு உறுதிபூண்டுள்ளோம் என்பதோடு, தற்போதைய பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் செயற்பாட்டு தேவைகளின் அடிப்படையில் எங்களின் நடைமுறைகளினை மீள் மதிப்பீடு செய்து சீராக்கிக் கொள்வதன் மூலம் எங்களின் இடமாற்றக் கொள்கையுடன் எதிர்காலத்தில் இணங்குவதை நிச்சயித்துக்கொள்வதற்கு தீவிரமாக செயல்பட்டு வருகின்றோம். | கம்பனியின் ஊழியர் இடமாற்றக் கொள்கையினை கடைப்பிடிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |